2009 பிப்ரவரி 26] [திரு. மு.க. ஸ்டாலின்]

வசூலிக்க நகராட்சிச் சட்டத்தில் வழிவகை இல்லை. இருப்பினும் இந்த நிகழ்வு சீராய்வு அல்ல. தவறு மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதற்கான திருத்தமே என்ற அடிப்படையில் உறுப்பினர் கூறக்கூடிய சொத்து வரி கேட்பு இனங்களுக்கு மட்டும் பழைய வரி வசூலித்துக்கொள்ள அறிவுரை வழங்கப்படும். குழுவின் அறிக்கைக்குப் பின் நிலுவைத் தொகை வசூல் செய்யப்படும். இதுதவிர, அரசாணை எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23–6–2008–இல் சொத்து வரிச் சீராய்வு குறித்து அந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றமே, அதன் வருவாய் மற்றும் செலவினங்களைக் கருத்திலேகொண்டு அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய உயர்வு சதவீதத்திற்குள் இருக்கும்படி தீர்மானித்துக்கொள்ளலாம் எனத் தெளிவுரை வழங்கிய பின்னர், அந்தந்த நகரமன்றங்கள் வரி உயர்வு குறித்து உரிய தீர்மானங்கள் இயற்றி இருக்கின்றன. முறையாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரும், பல நகராட்சிகளிலிருந்து சொத்து வரி குறைப்பது குறித்து மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் பெறப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சொத்து வரிமூலம் கிடைக்கப்பெறும் வருவாய்தான் நகராட்சியினுடைய முக்கிய வருவாயாக அமைந்திருக்கிறது என்பது உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். நகராட்சிகளில் பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளுக்கு அரசு பெருமளவில் நிதி உதவி செய்தாலுங்கூட, நகராட்சிகளும் தன்னுடைய பங்குத் தொகையாக தோராயமாக 30 சதவீதம் பங்களிப்பு செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தும் நேர்வில், ஊதிய செலவினம் சுமார் 25 சதவீதம் கூடிவிடும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இந்த நிலையில் மாதா மாதம் நகராட்சிப் பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கவும் பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொள்வதும் மிக மிகக் கடினமாக அமைந்திருக்கிறது. இந்த நிலையில் சொத்து வரியினைக் குறைத்து வசூலிக்கும்பட்சத்தில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அந்த விவரமும் இந்த அவையிலே தெரிவிக்கப்படுகிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஒ) மேலூர் தொகுதி, அரசு விழாவில் உரிய சட்டமன்ற உறுப்பினரை அழைத்து நலத் திட்ட உதவிகள் வழங்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

[2009 பிப்ரவரி 26

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய மேலூர் தொகுதியில் அதிர்ச்சி தரக்கூடிய வகையில் ஓர் அரசு விழா நடந்திருக்கின்றது. நேற்று சட்டமன்ற நிகழ்ச்சிகள் இங்கே நடந்து கொண்டிருக்கும்போது, நான் இங்கே சென்னையிலே இருந்து கொண்டிருக்கிறேன். மேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நான். எனக்குத் தெரியாமலே அங்கே அரசு நலத் திட்ட உதவிகள் எல்லாம் வழங்கும் விழாவை அரசாங்கத்திலே ஏற்பாடு செய்து அதை வேறு தொகுதி எம்.எல்.ஏ.வை வரச் சொல்லி, சோழவந்தான் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு மூர்த்தி அவர்களை வரச் சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து நலத் திட்ட உதவிகளை வழங்குகின்றபோது, எம்.எல்.ஏ. நலத் திட்ட உதவிகளை வழங்குவார் என்று மைக்-இலே அறிவிக்கின்றபோது, சோழவந்தான் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நலத் திட்ட உதவிகளை வழங்கி இருக்கின்றார். இது எந்தவகையில் நியாயம் என்பதை அரசு அறிவிக்க வேண்டும். என்னுடைய, சட்டமன்ற உறுப்பினருடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினர் நானா? இல்லை மூர்த்தியா? நான் சட்டமன்ற உறுப்பினராக மேலூர் தொகுதிக்கு இருப்பது உங்களுக்கு வேண்டாம் என்றால் என்னுடைய பதவியை எடுத்துவிட்டு, மூர்த்திக்குப் பதவி உயர்வு கொடுத்து, அவரை transfer செய்து, மேலூர் தொகுதியிலே வைத்து நீங்கள் நலத் திட்ட உதவிகளை வழங்கும் விழாக்களை நடத்துங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சாமி, அமைதியாக உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அ.இ.அ.தி.மு.க.-வைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சாமி அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே பெயர் போடாத பிரச்சினையைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே சங்கரன்கோவில் தொகுதியிலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றபோது பெயர் போட்டதற்காகவே ஒரு பிரச்சினை வந்தது என்பதும் நாம் அறிந்த ஒரு செய்தியாகும். அதுகுறித்து வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இன்னமும் சம்பந்தப்பட்டவர் பிடிபட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என்பதும் இந்த அவைக்கு நன்றாகத் தெரியும். அது

2009 பிப்ரவரி 26] [திரு. மு.க. ஸ்டாலின்]

வேறு. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் அரசு நிகழ்ச்சிகளை நடத்துகிறபோது அதிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் முறையாகத்தான் போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அப்படிப் போடப்படக்கூடிய நிலையிலேகூட, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய, குறிப்பாக, எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த நிகழ்ச்சிக்கும் வந்ததில்லை என்ற நிலைதான் இதுவரையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சாமி அவர்கள் சொன்னதைப்போல பெயர் போடாமல் விடுபட்டிருந்தால் அதுகுறித்து உரிய விசாரணையை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும். வரக்கூடிய காலக்கட்டத்தில், இவ்வாறு ஏற்படாத ஒரு சூழ்நிலையை இந்த அரசு நிச்சயமாக உருவாக்கித் தரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஓ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் உரையில் வழக்கறிஞர்களைப் பற்றிக் குறிப்பிட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். திரு. சாமி, உட்காருங்கள். குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடு) வேறு என்ன, திரு. மணி? (குறுக்கீடு) திரு. இராஜா, கொஞ்சம் wait பண்ணுங்கள். Please கொஞ்சம் wait பண்ணுங்கள். திரு. ஜி.கே. மணி.

பிற்பகல் 12–40

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்ற வளாகத்தில் நடந்த சம்பவம் குறித்து, நல்லதொரு இணக்கமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, "காக்கிச் சட்டையும், கறுப்புச் சட்டையும் ஒத்துழைக்க வேண்டும்" என்ற அடிப்படையில், ஒரு வேண்டுகோள் வைத்து, "அந்த நிலை ஏற்படுவதற்கு நான் உண்ணாநிலையை